සියලු ම හිමිකම් ඇවිරිණි. / All Rights Reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் - 07 - 2023 (2024)
Third Term Test - Grade 07 - 2023 (2024)

# வரலாறு

நேரம்: 2 மணி.

சுட்டெண்:

## பகுதி I

- எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.
- 1 - 5 வரையான வினாக்களுக்கு மிகச்சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

01. கலிங்க மாகனின் படையெடுப்பின் போது இலங்கையை ஆட்சி செய்த மன்னன் யார்?
    i. நிஸங்கமல்ல மன்னன் ii. பராக்கிரமபாகு மன்னன்
    iii. பராக்கிரம பாண்டிய மன்னன் iv. 5ஆம் மகிந்தன்
02. பின்வரும் பிரதேசங்களுள் மூன்றாம் விஜயபாகு மன்னன் கட்டிய தலதா மாளிகை அமைந்துள்ள பிரதேசம் எது?
    i. பெலிகல ii. கண்டி iii. பொலன்னறுவை iv. யாப்பகுவ
03. இலங்கையில் முகமூடி மற்றும் பொம்பலாட்டக் கலைக்கு பிரசித்தமான இடம் எது?
    i. உடுபில ii. கம்பளை iii. தும்பர iv. பிலிமத்தலாவ
04. இத்தாலியின் தலைநகரம் எது?
    i. கிரேக்கம் ii. உரோமம் iii. ஜெரூசலம் iv. எதென்ஸ்
05. கஹபண எனும் நாணயம் எதனால் தயாரிக்கப்பட்டுள்ளது?
    i. வெள்ளி ii. தங்கம் iii. செம்பு iv. பித்தளை

- 6 - 10 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் முன்னால் உள்ள அடைப்பினுள் இடுக.

06. நாட்டார் பாடல்களும் பழக்கவழக்கங்களும் தொட்டுணரக் கூடிய மரபுரிமைகளுக்குட்பட்டது. ( )
07. சுப சேனாதிபதி மினிப்பேயில் கங்தெனிய குன்றில் கோட்டை ஒன்றை அமைத்துக் கொண்டான். ( )
08. விஜய கூலங்கை எனும் ஆரியச்சக்கரவர்த்தி யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் மன்னனாவான். ( )
09. பாதீனன் ஆலயம் உரோமாபுரியிலுள்ள மிகப் பழமையான கட்டடமாகும். ( )
10. ஓகஸ்டஸ் சீசர் உரோமின் முதலாவது பேரரசனாவான். ( )

- 11-15 வரையான வினாக்களுக்கு மிகச்சரியான விடைகளை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.

11. சிங்களம், பாளி, சமஸ்கிருத மொழிகளை கற்ற ....................................... மன்னன் “கலிகால சாஹித்ய சர்வக்ஞ பண்டித” எனும் புகழ் நாமத்தை பெற்றார்.
12. கம்பளை காலத்தில் .............................. தேச சஞ்சாரி இபுனு பதூதா இலங்கைக்கு வந்தார்.
13. புராதன கிரேக்க நாகரிக மக்கள் ....................................... தெய்வத்தை முதன்மையானவராக கருதப்பட்டனர்.

14. நிஸங்கமல்ல மன்னன் பொலன்னறுவையில் கட்டிய தலதா மாளிகை ...................................... எனும் பெயரால் அழைக்கப்பட்டது.

15. முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் மனைவியான ...................................... ஆடல் பாடல்களில் சிறந்து விளங்கினாள்.

(அட்டதாகே, இரண்டாம் பராக்கிரம பாகு, சீயுஸ், ரூபவதி, முஸ்லிம், உரோம, சுகலா, லங்காதிலக)

- **16 - 20 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள இடைவெளிகளுக்கு உரிய விடைகளை எழுதிப் பூரணப்படுத்துக.**

16. உருகுணையிலிருந்த மக்கள் தலைவனான புதல்னா பற்றிய விபரங்கள் அடங்கிய சாசனம் .......................................... ஆகும்.

17. இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் ...................................... எனும் அமைச்சர் மூலம் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டான்.

18. பன்சீய பனஸ் ஜாதகக்கதை நூல் சிங்கள மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டது ....................................... யுகத்திலாகும்.


19. உரோமில் நிர்மாணிக்கப்பட்ட ....................................... எனும் பெருங்குளியல் தடாகம் உலக வரலாற்றில் மிக உன்னத நிர்மாணிப்பாகும்.

20. பயிர்ச்செய்கைக்காக புதிதாக தீயிட்டு உருவாக்கிக் கொண்ட நிலம் ........................................ என அழைக்கப்படும்.

(40 புள்ளிகள்)


## பகுதி II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினா உட்பட மேலும் 4 வினாக்களுக்கு விடையளிக்க.**




01. அ. i. இலங்கையின் ஐந்தாவது இராசதானி பின்வரும் இலங்கைப்படத்தில் A எனும் எழுத்தால் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நகரத்தை இனங்கண்டு எழுதுக. (2 புள்ளிகள்)

ii. யாழ்ப்பாண இராச்சியத்தை குறிப்பிடும் ஆங்கில எழுத்து யாது? (2 புள்ளிகள்)




(ஆ) i. உரோம நாகரிகம் தோற்றம் பெற்ற நாடு பின்வரும் உலகப்படத்தில் A எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ளது. இந்நாட்டை இனங்கண்டு எழுதுக. (2 புள்ளிகள்)

ii. இலங்கையுடன் புராதன காலத்திலிருந்து வர்த்தகத் தொடர்புகளை பேணிவந்த சீனா எந்த எழுத்தால் காட்டப்பட்டுள்ளது? (2 புள்ளிகள்)



A

(இ) i. A எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ள கட்டடம் யாது?

ii. இது எந்த இராசதானிக்காலத்தில் கட்டப்பட்டது?

iii. இந்த இராச்சியத்தின் முதல் மன்னன் யார்?

iv. இக்கால கட்டத்தில் றைகமையிலும் ஆட்சி அதிகாரத்தில் ஈடுபட்ட வம்சத்தினர் யார்?

(4 புள்ளிகள்)

(ஈ) i. B எனும் உருவிலுள்ள கட்டடம் யாது?
ii. இது யாரால் கட்டப்பட்டது?
iii. இது எந்நாட்டில் உள்ளது?
iv. இதனை கட்டுவதற்கு அதிகளவில் பயன்படுத்திய மூலப்பொருளொன்றை குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)



B

02. i. புராதன காலத்தில் சேனைகளில் பயிரிடப்பட்ட உலர் தானிய பயிர்கள் 3 குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. இலங்கையின் கைத்தொழில்கள் சம்பந்தமான பின்வரும் அட்டவணையிலுள்ள ஆங்கில எழுத்துகளுக்குரிய விடைகளை கீழுள்ள அடைப்பிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

| கைத்தொழில் | கைவினைஞர் | உற்பத்திபொருள் |
|---|---|---|
| களிமண் | A ...................... | B ................................ |
| C .......................... | பெஹெகார | D ............................... |

(மட்பாண்டம், துணிமணி, லோகுரு, பஞ்சு, கும்பகார, சீனி) (4 புள்ளிகள்)

iii. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.
A - புராதன மூலாதாரங்களில் நிகம் எனும் சொல் எதனைக் குறிக்கின்றது?
B - புராதன காலத்தில் திருகோணமலைத் துறைமுகத்தை எவ்வாறு அழைத்தனர்?
C - புராதன கால மக்கள் உழைப்புக்கு உழைப்பை பரிமாற்றிக் கொண்ட செயற்பாட்டை எவ்வாறு அழைத்தனர்?
D - சாலியகுமரனின் மனைவியின் பெயர் என்ன? (4 புள்ளிகள்)

03. i. அநுராதபுரக் காலத்தில் இந்நாட்டை ஆக்கிரமித்த தென்னிந்திய இராச்சியங்கள் பின்வருமாறு. இவற்றின் தலைநகரங்களை குறிப்பிடுக.
A - பல்லவ
B - பாண்டிய
C - சோழ (3 புள்ளிகள்)

ii. முதலாம் விஜயபாகு மன்னன் பற்றிய வினாக்கள் பின்வரும் A,B,C,D என தரப்பட்டுள்ளன. இவ் வினாக்களுக்குரிய விடைகளை எழுதிப்பூரணப்படுத்துக.

| | |
|---|---|
| முதலாம் விஜயபாகு மன்னன் | A தாய் யார்? |
| | B தந்தை யார்? |
| | C சகோதரி யார்? |
| | D மனைவி யார்? |

(4 புள்ளிகள்)

iii. நிஸங்கமல்ல மன்னன் பொலன்னறுவையை ஆட்சி செய்யும் போது எதிர்நோக்கிய சவால்கள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

04. i. இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் எதிர்நோக்கிய போர்கள் 3 குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.
A - குருநாகல் இராச்சியத்தின் முதல் மன்னன் யார்?
B - இம்மன்னனுக்கு பிறகு ஆட்சிக்கு வந்த மன்னன் யார்?
C - குருநாகல் இராச்சிய காலத்தில் எழுதப்பட்ட நூல்கள் இரண்டினைத் தருக? (4 புள்ளிகள்)

iii. A - கோட்டை யுகத்தில் ஆரம்பிக்கப்பட்ட பிரிவெனாக்கள் இரண்டு தருக?
B - யாழ்ப்பாண இராச்சியத்தின் தகவல்களை அறிந்துகொள்ளக் கூடிய மூலாதாரங்கள் இரண்டு தருக? (4 புள்ளிகள்)

(4) WWW.PastPapers.WiKi (3)

Download Term Test Papers, Short Notes From One Place!

05. i. புராதன கிரேக்க நாகரிகத்திற்குட்பட்ட நகரங்கள் 3 தருக? (3 புள்ளிகள்)

ii. கிரேக்க நாகரிகம் தோன்றிய கீரிஸ் தீவு சம்பந்தமாக பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க

A - கிரீஸ் தீவுக்கு கிழக்காக அமைந்துள்ள கடல்

B - கிரீஸ் தீவுக்கு மேற்காக அமைந்துள்ள கடல்

C - கிரீஸ் தீவுக்கு வடக்கிலுள்ள நாடு

D - கிரீஸ் தீவுக்குட்பட்ட பெரிய தீவையும் ஒழுங்குமுறையில் குறிப்பிடுக (04 புள்ளி.)

iii. கிரேக்கத்தில் காணப்பட்ட பிரசித்தி பெற்ற

(A) நாடக கலைஞர் இருவரை குறிப்பிடுக.

(B) இலக்கிய கர்த்தாக்கள் இருவரை குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

06. i. நீர் கற்றுக் கொண்ட உரோம நாகரிகத்துக்குட்பட்ட நாடுகள் 3 தருக? (3 புள்ளிகள்)

ii. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

A - வாய்மொழிக் கதையில் உரோம நகரத்தை கட்டியெழுப்பியவன் யார்?

B - ஜெருசலம் உரோமப் பேரரசுக்குட்பட்டிருந்த சமயம் அங்கு நிகழ்ந்த முக்கிய நிகழ்வு யாது?

C - உரோமில் வாழ்ந்த வர்ஜில் எனும் எழுத்தாளர் எழுதிய நூல் எது?

D - உரோம சமூகத்தின் மூன்று பிரிவினர்களுள் மிகவும் கீழ் மட்டத்திலுள்ள பிரிவினர் யாவர்? (4 புள்ளிகள்)

iii. உரோமானிய நாகரிகத்தால் உலகிற்கு கிடைத்த பாரம்பரியங்கள் 4 தருக? (4 புள்ளிகள்)

07. i. புராதன இலங்கையில் இடம் பெற்ற விவசாயம் சார்ந்த நடவடிக்கைகள் சம்பந்தமான பின்வரும் அட்டவணையில் காணப்படும் இடைவெளிகளை பூரணப்படுத்துக.

- விவசாயம்
  - பயிர்ச்செய்கை
    - B. ..........................
    - C. ..........................
  - A. ..........................

(3 புள்ளிகள்)

ii. பின்வரும் உருக்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.

| | |
|---|---|
|  | 1. இவ்வுருவிலுள்ள தூபியின் பெயரைக் குறிப்பிடுக.<br>2. இந்த இடத்தில் பிறந்த மன்னன் யார்?<br>3. இம்மன்னனின் தாயின் பெயர் என்ன? |
|  | 4. இவ்வுருவிலுள்ள நிர்மாணிப்பு யாது?<br>5. இது எந்த இராச்சியத்துக்குட்பட்டது?<br>6. இது எமது நாட்டின் தொட்டுணரக்கூடிய அல்லது தொட்டுணர முடியாத பாரம்பரியமொன்றா என்பதனை குறிப்பிடுக? |
|  | 7. இவ்வுருவிலுள்ள கலையம்சம் என்ன?<br>8. இந்த சித்திரத்தை வரையப்பயன்படுத்தப்படும் மூலப் பொருளைத் தயாரிக்க எடுத்துக் கொள்ளப்படும் சிற்றுயிரினம் எது? |

(8 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

(4) WWW.PastPapers.WiKi (4)



Download Term Test Papers, Short Notes From One Place!

සියලු ම හිමිකම් ඇවිරිණි. / All Rights Reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் - 07 - 2023 (2024)
Third Term Test - Grade 07 - 2023 (2024)

# வரலாறு

விடைப்பத்திரம்

## பகுதி I

1. 5ஆம் மகிந்த மன்னன்
2. பெலிகல
3. உடுவில பிரதேசம்
4. உரோம்
5. வெள்ளி
6. ✓
7. ×
8. ✓
9. ✓
10. ✓
11. 2ம் பராக்கிரமபாகு மன்னன்
12. அரேபிய
13. தியுஸ்
14. அட்டதாகே
15. ரூபவதி
16. பனா கடுவ செப்பு சாசனம்
17. மகாதூபி
18. எகிப்து
19. சுரங்கக்கால்வாய்
20. மேட்டுநிலம்

(2 x 20 = 40 புள்ளிகள்)

## பகுதி II

01. (அ)
    i. குருநாகல்
    ii. C

(ஆ)
    i. இத்தாலி
    ii. D

(இ)
    i. லங்காதிலக விகாரை
    ii. கம்பளை
    iii. நான்காம் புவனேகபாகு
    iv. அலகேஸ்வர

(ஈ)
    i. பாதினன் ஆலயம்
    ii. அதீனா தேவதை
    iii. கிரேக்க
    iv. சுண்ணக்கல், வெண்பளிங்குக்கல், வர்ண செங்கல்

02. i. திணை, சாமை, குரக்கன்
    ii. A - கும்பகார B - மட்பாத்திரம் C - பஞ்சு D - துணி மணி
    iii. A - வர்த்தக நகரம் B - கோகர்ண C - அத்தம் முறை D - அசோக மாலா

03. i. A - காஞ்சிபுரம் B - மதுரை C - தஞ்சாவூர்
    ii. A - லோகிதா தேவி B - மகாசாமி மொகல்லான C - மித்தா D - திரிலோக சுந்தரி
    iii. வெளிநாட்டுப்பூர்வீகம்
    பராக்கிரமபாகுவின் சிறந்த சேனாதிபதிகளைத் தன் வசப்படுத்தல்
    பாண்டியர்களின் எழுச்சியைத் தடுத்தல்
    உருகுணையைத் தன் வசமாக்கிகொள்ளல்



(2) WWW.PastPapers.WiKi (1)
Download Term Test Papers, Short Notes From One Place!

04. i. கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு, சந்திரபானுவின் ஆக்கிரமிப்பு, சந்திரபானுவின் இரண்டாவது ஆக்கிரமிப்பு,

ii. A - இரண்டாம் புவனேகுபாகு மன்னன்
B - நான்காம் பராக்கிமபாகு மன்னன்
C - தலதாசிரித, அநாகத வம்சம், சிங்கள போதி வம்சம்

iii. A - சுனேத்ராதேவி பிரிவெனா, கூரகல பத்மாவதி பிரிவெனா
B - யாழ்ப்பாண வைபவமாலை
செகராச சேகர மாலை

05. i. அதென்ஸ், ஸ்பாட்டா

ii. A - ஈஜியன் கடல்
B - அயோனியன் கடல்
C - மெசிடோனியா
D - கிரிட் தீவு

iii. A - ஈஸிகலஸ், சொபொக்லிஸ், யூரிபிடிஸ்
B - ஹெரடோடஸ், அரிஸ்டோட்டில், தியுசீடிஸ்

06. i. ஸ்பானியா, இங்கிலாந்து, பிரான்ஸ்

ii. A - ரொமியுலஸ் B - இயேசு நாதரின் பிறப்பு C - ஈனிட் D - அடிமைகள்

iii. கிறிஸ்தவ சமயம்
உரோமானிய சட்டம்
இலத்தீன் மொழி
உரோமானிய கட்டட நிர்மாணக்கலை

07. i. A - விலங்கு வளர்ப்பு
B - சேனைப்பயிர்ச்செய்கை (மேட்டுநிலப்பயிர்ச் செய்கை)
C - நெற்பயிர்ச் செய்கை (சேற்றுநிலப்பயிர்ச் செய்கை)

ii. 1. தெதிகம சூத்திகர சைத்திய
2. Iம் பராக்கிரமபாகு மன்னன்
3. ரத்னமாலி அரசி
4. நிஸங்கலதா மண்டபம்
5. பொலன்னறுவை
6. தொட்டுணரக்கூடியது
7. அரக்கு சித்திரக் கலை
8. கெப்பெட்டியா செடியில் வாழும் லாக்ஷா

(2) WWW.PastPapers.WiKi (2)
Download Term Test Papers, Short Notes From One Place!



LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න